பகவத்கீதை

த. சுந்தரராஜ சர்மா.

மொழிபெயர்த்தது.

(பெரிய பதிப்பின் சங்கிரகம்)

1909

வேதாந்தபோதினி ப்ரெஸ், சென்னை.

காபிரைட் ரிஸெர்வ்ட்

ஸ்ரீ உ ஹ ம வ தீ தா

சுய வ்ரயஸொऽயூயாயः சுஜுஂநவிஷாதியொமः ॥

ய்ரதராஷ்ட்ர உவாச—

க. யஃக்ஷெத்ரெ குருக்ஷெத்ரெ ஸமவெதா யுயுத்ஸவः ।
மாமகாः பாண்டவாஶ்சைவ கிமகுர்வத ஸஂஜய ॥

ஸ்ரீமத் பகவத் கீதை

முதல் அத்தியாயம் : அர்ஜுன விஷாதயோகம்

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான் :

க. ஸஞ்ஜய ! போர்செய்யஸன்னத்தராய் குருக்ஷேத்திரமென்னும் தரு மபூமியிலே ஒருங்குகூடிய நம்மவரும் பாண்டவரும் என் செய்தார்கள்?

ஸஞ்ஜய உவாச—

உ. த்ருஷ்ட்வா து பாண்டவானீகம் வ்யூடம் துர்யோதனஸ்ததா ।
ஆசார்யமுபஸங்கம்ய ராஜா வசனமப்ரவீத் ॥
ந. பஶ்யைதாம் பாண்டுபுத்ராணாம் ஆசார்ய மஹதீம் சமூம் ।
வ்யூடாம் த்ருபதபுத்ரேண தவ ஶிஷ்யேண தீமதா ॥ [வசனம்
ச. அத்ர ஶூரா மஹேஷ்வாஸா: பீமார்ஜுனஸமா யுதி ।
யுயுதானோ விராடஶ்ச த்ருபதஶ்ச மஹாரத: ॥

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

உ. துர்யோதனராஜன், பாண்டவர்களின்படை அணிவகுக்கப்பட்டு நிற்பதைக் கண்டு, அப்பொழுது ஆசார்யரருகிற்சென்று (இவ்) வார்த்தையைப் பேசலாயினன் :

ந. ஆசார்யரே ! பாண்டவருடைய இப்பெரியசேனையானது உமது புத்திசாலி சிஷ்யனான துருபதராஜகுமாரனாலே அணிவகுக்கப்பட்டுநிற்பதைப் பார்ப்பீர்களாக.

ச. இங்கே மகாவில்லாளரான சூரரும், போரில் பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸமானருமான யுயுதானன், விராடன், மகாரதனான துருபதன்,

ரு. ஧்ருஷ்டகேதுஶ்சேகிதாந: காஶிராஜஶ்ச வீர்யவாந் ।
புருஜித் குந்திபோஜஶ்ச ஶைப்யஶ்ச நரபுங்கவ: ॥
சு. யுதாமந்யுஶ்ச விக்ராந்த: உத்தமௌஜாஶ்ச வீர்யவாந் ।
ஸௌபத்ரோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வ ஏவ மஹாரதா: ॥
எ. அஸ்மாகம் து விஶிஷ்டா யே தான்நிபோத த்விஜோத்தம ।
நாயகா மம ஸைந்யஸ்ய ஸம்ஜ்ஞார்த்தம் தான் ப்ரவீமி தே ॥
அ. பவாந் பீஷ்மஶ்ச கர்ணஶ்ச க்ருபஶ்ச ஸமிதிஞ்ஜய: ।
அஶ்வத்தாமா விகர்ணஶ்ச ஸௌமதத்திஸ்ததைவ ச ॥

ரு. த்ருஷ்டகேது, சேகிதானன், வீர்யசாலியான காசிராஜன், புருஜித், குந்திபோஜன், மனிதரிற் சிறந்தவனான சைப்யன்,

சு. பராக்கிரமசாலியான யுதாமந்யு, வீர்யசாலியான உத்தமௌஜஸ், ஸுபத்ராகுமாரன், திரௌபதி குமாரர், எல்லோருமே மகாரதர்கள்.

எ. ஆனால், பிராமணோத்தமரே ! நம்மில் சிறந்தவரான என்சேனைத் தலைவர்கள் எவரோ, அவர்களைத் தெரிந்துகொள்க. தங்களுக்கு ஞாபகக் குறிப்புக்காக அவர்களைக் கூறுகின்றேன் :

அ. தாங்களும், பீஷ்மரும், கர்ணனும், போரில் வெற்றிபெறும் கிருபரும், அச்வத்தாமனும், விகர்ணனும், ஸோமதத்தன் குமாரனும், ஜயத்ரதனும்

க. அன்யே ச பஹவஶூரா: மதர்தே த்யக்தஜீவிதா: ।
நாநாஶஸ்த்ரப்ரஹரணா: ஸர்வே யுத்தவிஶாரதா: ॥
கம. அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம் ।
பர்யாப்தம் த்விதமேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம் ॥
கக. அயனேஷு ச ஸர்வேஷு யதாபாகமவஸ்திதா: ।
பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த: ஸர்வ ஏவ ஹி ॥

க. மற்றும் அனேகசூரரும் எனக்காக உயிரைவிடத் துணிந்தவர்: போர்செய்யக் கருவியான பல பல ஆயுதங்களுடையவர்: போர்புரிதலில் ஸகலரும் தேர்ந்தவர்.

கம. பீஷ்மரால் பாதுகாக்கப்பட்டதான நம்முடைய இச்சேனை அபரிமிதமாயிருக்கின்றது. பீமனாற் காக்கப்பட்டதான இவர்களுடைய இச்சேனையோ மிதமாயிருக்கின்றது.

கக. ஆகவே, நீங்களெல்லாருமே எல்லாப்படைவகுப்புக்களிலும் தம்தம் நிலைகளினின்று பீஷ்மரையே எல்லாப்புறங்களிலும் காத்தல் வேண்டும்.

கஉ. தஸ்ய ஸஞ்ஜநயந்ஹர்ஷம் குரு:வ்ருத்த: பிதாமஹ: ।
ஸிம்ஹநாதம் விநத்யோச்சை: சங்கம் தத்ப்ரதாபவாந் ॥
கங. தத: சங்காஶ்ச பேர்யஶ்ச பணவாநககோமுகா: ।
ஸஹஸைவாப்யஹந்யந்த ஸ ஶப்தஸ்துமுலோ ऽபவத் ॥
கச. தத: ஶ்வேதைர்ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தநே ஸ்திதௌ ।
மாதவ: பாண்டவஶ்சைவ திவ்யௌ சங்கௌ ப்ரதத்மது: ॥ [கஎ.]

கஉ. கௌரவர்களில் பெரியவரும் பிரதாபசாலியுமான பாட்டனார் [பீஷ்மர்], அவனுக்கு [துர்யோதனனுக்கு] உத்ஸாஹ முண்டாக்குபவராய், உரக்க ஸிம்ஹநாதஞ்செய்து சங்கை யூதினார்.

கங. பின்பு சங்குகளும், பேரிகளும், தம்பட்டங்களும், பறைகளும், ஊதுகொம்புகளும் உடனே சடக்கென்று முழக்கப்பட்டன; அவ்வொலி நிரம்பி நின்றது.

கச. அப்பால், மாதவனும் பாண்டவனும் வெண்குதிரைகள்பூட்டியதோர் பெரிய தேரினுள் இருந்தே (தமது) திவ்யமான சங்குகளை ஊதினார்கள்.

கடு. பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேசோ தேவதத்தம் தநஞ்ஜய: ||
பௌண்ட்ரம் தத்மௌ மஹாசங்கம் பீமகர்மா வ்ருகோதர: ||

கக. அநந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்டிர: |
நகுல: ஸுகோஷமணிபுஷ்பகௌ ||

கஎ. காஶ்யஶ்ச பரமேஷ்வாஸ: ஶிகண்டீ ச மஹாரத: |
ப்ருஷ்டத்யும்நோ விராடஶ்ச ஸாத்யகிஶ்சாபராஜித: ||

கடு. ஹ்ருஷீகேசன் பாஞ்சஜந்யத்தையும், அர்ஜுனன் தேவதத்தத்தையும், பயங்கரத்தொழிலனான வீமன் பௌண்ட்ரமென்னும் பெரிய சங்கையும் முழக்கினார்கள்.

கக. குந்திகுமாரன் யுதிஷ்டிரராஜன் அநந்தவிஜயத்தையும், நகுலன் ஸுகோஷத்தையும், ஸஹதேவன் மணிபுஷ்பகத்தையும் (ஊதினார்கள்.)

கஎ. சிறந்த வில்லாளனான காசிராஜனும், மகாரதனான சிகண்டியும், த்ருஷ்டத்யும்நனும், விராடனும், (பகைவரால்) ஜயிக்கப்படாத ஸாத்யகியும்,

கஅ. த்ருபதோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வ: ப்ருதிவீபதே |
ஸௌபத்ரஶ்ச மஹாபாஹு: ஶங்கான் தத்மு: ப்ருதக் ப்ருதக் ||

கக. ஸ கோஷோ தார்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத் |
நபஶ்ச ப்ருதிவீம் சைவ துமுலோ வ்யநுநாதயந் || [யச |

உ0. அத வ்யவஸ்தாந் த்ருஷ்ட்வா தார்தராஷ்ட்ரான் கபித்வஜ: |
ப்ரவ்ருத்தே ஶஸ்த்ரஸம்பாதே தநுருத்யம்ய பாண்டவ: ||

கஅ. துருபதனும், திரௌபதிகுமாரர்களும், உயர்தோளனான ஸௌபத்ராகுமாரனும் ஆகிய ஸகலரும், பூபதியே! தனித்தனியாய் (தம்தம்) சங்குகளை முழக்கினார்கள்.

கக. ஆரவாரித்த அவ்வொலியானது, பூமியையும் ஆகாசத்தையும் எதிரொலிக்கும்படிசெய்வதாய்த் திருதராஷ்டிரனைச் சேர்ந்தவர்களின் நெஞ்சுகளைப் பிளந்தது.

உ0, உக, உஉ. வேந்தே! பின்பு (போர்வீரர்) ஆயுதங்களை வழங்கத் தலைப்பட்டவுடன், குரங்குக்கொடியோன் பாண்டவன், ஒழுங்காக அணிவகுக்கப்பட்டு நிற்கும் திருதராஷ்டிரஜனத்தாரைப் பார்

உக. ஹ்ருஷீகேஶம் ததா வாக்யமிதமாஹ மஹீபதே ।
அர்ஜுந உவாச—
ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேঽச்யுத ॥
உஉ. யாவதேதாந்நிரீக்ஷேঽஹம் யோத்துகாமாநவஸ்திதாந் ।
கைர்மயா ஸஹ யோத்தவ்யமஸ்மிந் ரணஸமுத்யமே ॥
உங. யோத்ஸ்யமாநாநவேக்ஷேঽஹம் ய ஏதேঽத்ர ஸமாகதாः ।

த்து, (கையில்) வில் ஏந்தி, அப்பொழுது ஹ்ருஷீகேசனிடத்து இவ்வார்த்தையைக் கூறலாயினன்

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

"போர்செய்யக்கருதி (இங்கு)நிற்கின்ற இவர்களை யான் பார்க்கக் கூடிய இடத்திலே, இருசேனைக்கும் நடுவிலே, அச்யுத ! எனது தேரை நிறுத்துக. இப்போர்மும்மரத்திலே யான் எவருடன் போர் செய்ய வேண்டுமோ, (அவரைத் தெரிந்துவைத்துக்கொள்கிறேன். ஏனெனில்,)

உங. எந்த இவர்கள் திருதராஷ்டிரபுத்திரனானகெடுபுத்தியானுக்கு [துர்யோதனனுக்கு]ப் போரிலே உதவிபுரியக்கருதி(ப் பற்பலதேசங்களிலிருந்து) இங்கு வந்துள்ளாரோ, (அவர்கள் ஸமாதாநத்தை விரும்

யுத்துராஷ்ட்ரஸ்ய துர்புத்தேர்யுத்தே ப்ரியசிகீர்ஷவः ॥
ஸஞ்ஜய உவாச—
உச. ஏவமுக்தோ ஹ்ருஷீகேशः குடாகேशேந பாரத ।
ஸேநயோருபயோர்மத்யே ஸ்தாபயித்வா ரதோத்தமம் ॥
உரு. பீஷ்மத்ரோணப்ரமுகதः ஸர்வேषாம் च மஹீக்ஷிதாம் ।
உவாச பார்த பஶ்யைதாந் ஸமேதாந் குருநிதி ॥

புவதாகக் காணப்படவில்லை; ஆனால், அவர்களை) போர்செய்யப்போகிறவராகக் காண்கின்றேன். "

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

உச, உரு. பாரத ! இவ்வாறு குடாகேசனாற் கூறப்பெற்ற ஹ்ருஷீகேசன், இருசேனைக்கும் நடுவிலே, பீஷ்மருக்கும் துரோணருக்கும் (மற்றுமுள்ள) சகல அரசருக்கும் எதிரிலே சிறந்த தேரை நிறுத்தி, " பார்த்த ! (இங்குக்) கூடிய இக்கௌரவர்களைப் பார்" என மொழிந்தனர்.

உகூ. தத்ராபஶ்யத் ஸ்தி தாந் பார்தஃ
பிதரூந் அத பிதாமஹாந் ।
ஆசார்யாந் மாதுலாந் ப்ராதரூந்
புத்ராந் பௌத்ராந் ஸகீம்ஸ்ததா ॥

உஎ. ஶ்வஶுரான் ஸுஹ்ருதஶ்சைவ ஸேநயோருபயோரபி ।
தாந் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேயஃ ஸர்வாந் பந்தூந் அவஸ்தி தாந் ॥

உஅ. கிருபயா பரயாऽऽவிஷ்டோ விஷீதந்நிதமப்ரவீத் ।

உகூ, உஎ. தந்தையரும், பாட்டனரும், ஆசார்யரும், அம்மான்களும், பிராதாக்களும், புத்திரரும், பேரன்மார்களும், தோழர்களும், மாமனரும், மித்திரரும் அங்கு இருசேனையிலும் நிற்கக் கண்டான் பார்த்தன்.

உஎ, உஅ. அக்குந்திகுமாரன் அவ்வுறவினரனைவரும் (அங்கு) நிற்கக் கண்டு, மிக்க இரக்கம் மேலிடப்பெற்று, மனத்திடனழிந்து கலங்கி இதனைச் சொல்லலாயினன்.

ஸஞ்ஜய உவாச—

ஏவமுக்த்வா ஹ்ருஷீகேஶம் குடாகேஶ: பரந்தப: ।
ந யோத்ஸ்ய இதி கோவிந்தமுக்த்வா தூஷ்ணீம் பபூவ ஹ ॥
உகூ. தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸந்நிவ பாரத ।
ஸேநயோருபயோர்மத்யே விஷீதந்தமிதம் வச: ॥
ஙூ0. அஶோச்யாநந்வஶோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே ।
கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா: ॥
ஙூக. ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்
நாயம் பூத்வா பவிதா வா ந பூய: ।
அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே ॥

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

உஅ, உகூ. போர்புரிய எண்ணங்கொண்டு (போர்க்களத்திற்) போந்துள்ள இந்தஸ்வஜனத்தைப் பார்த்ததும், கிருஷ்ண ! என் அவயவங்கள் சோர்கின்றன : வாயும் உலர்கின்றது : என் உடம்பில் நடுக்கமும் மயிர்க்கூச்சும் உண்டாகின்றன :

ங0. காண்டீவமும் கையினின்று நழுவுகின்றது : உடம்பு முழுதும் எரிச்சலும் காண்கின்றது : என்னால் நிற்கவும் முடியவில்லை : என் மனமும் (மயங்கிச்) சுழல்கின்றது போலும்.

ங்க. கேசவ ! தீய சகுனங்களுங் காண்கிறேன். அன்றியும், போ

ந ச ஶ்ரேயோ ऽநுபஶ்யாமி ஹத்வா ஸ்வஜநமாஹவே ॥
௩௨. ந காங்க்ஷே விஜயம் கிருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகாநி ச ।
கிம் நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைர்ஜீவிதேந வா ॥
௩௩. யேஷாமர்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகாஃ ஸுகாநி ச ।
த இமே ऽவஸ்திதா யுத்தே ப்ராணாம்ஸ்த்யக்த்வா தநாநி ச ॥ [நி ச
௩௪. ஆசார்யாஃ பிதரஃ புத்ராஃ ததைவ ச பிதாமஹாஃ ।

ரில் ஸ்வஜனங்களைக் கொன்று, பின்பு (அதனாலாகும்) நன்மையுங் காணேன்.

௩௨. கிருஷ்ண! எனக்கு வெற்றியும் வேண்டாம்: ராஜ்யமும் வேண்டாம்: ஸுகங்களும் வேண்டாம். கோவிந்த! நமக்கு ராஜ்யத்தால்தான் என்ன? போகங்களால்தான் என்ன? உயிர்வாழ்க்கையினால்தான் என்ன?

௩௩, ௩௪. எவர்பொருட்டு நமக்கு ராஜ்யமும், போகங்களும், ஸுகங்களும் வேண்டுமோ, அந்த ஆசார்யரும், தந்தையரும், புத்திரரும், பாட்டனாரும், அம்மான்களும், மாமனார்களும், பேரன்மார்களும், மைத்துனர்களும், ஸம்பந்திகளுமாகிய இவர்களே உயிரையும் பொருளையும் விடத்

மாதுலாஃ ஶ்வஶுராஃ பௌத்ராஃ ஶ்யாலாஃ ஸம்பந்திநஸ்ததா ॥
௩௫. ஏதாந் ஹந்துமிச்சாமி ঘ்நதோऽபி மதுஸூதந ।
அபி த்ரைலோக்யராஜ்யஸ்ய ஹேதோஃ கிம் நு மஹீகதே ॥
௩௬. நிஹத்ய தார்தராஷ்ட்ராந்நஃ கா ப்ரீதிஃ ஸ்யாஜ்ஜநார்தந ।
பாபமேவாஶ்ரயேதஸ்மாந் ஹத்வைதாந் ஆததாயிநஃ ॥ [ந்வாந்
௩௭. தஸ்மாந்நார்ஹா வயம் ஹந்தும் தார்தராஷ்ட்ரான் ஸ்வபாந்

துணிந்து போருக்கு (வந்து) நின்றுகொண்டிருக்கிறார்கள்.

௩௫. மதுஸூதன! (இந்தத் துர்யோதனாதியர் என்னைக்) கொல்பவராயினும், (நான்) இவர்களைக் கொல்ல விரும்ப(வும்)மாட்டேன், மூவுலகராஜ்யமும் (எனக்குக்) கிடைப்பதென்றிருந்தாலும்; (ஆதலின், இம்)மண்ணுக்காக என்ன?

௩௬. ஜநார்த்தந! திருதராஷ்டிரபுத்திரரைக் கொன்றபின், நமக்கு உண்டாகும் ஸந்தோஷமென்ன? இக்கொடும்பாவிகளைக் கொன்றால் நமக்குப் பாபமே வந்துசேரும்.

௩௭. ஆதலின், நாம் நமது பந்துக்களாகிய திருதராஷ்டிரகுமாரர்க

ஸ்வஜநம் ஹி கதம் ஹத்வா ஸுகிந: ஸ்யாம மாதவ ||
௪௮. யத்யப்யேதே ந பஶ்யந்தி லோபோபஹதசேதஸ: |
குலக்ஷயகுதம் தோஷம் மித்ரத்ரோஹே ச பாதகம் ||
௪௯. கதம் ந ஜ்ஞேயமஸ்மாபி: பாபாதஸ்மாந்நிவர்திதும் |
குலக்ஷயே ப்ரபஶ்யந்தி தோஷம் ப்ரபதாமஜநார்தந ||
௫௦. குலக்ஷயே ப்ரணஶ்யந்தி குலதர்மா: ஸநாதநா: |
தர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்நமதர்மோ பிபவத்யுத ||

நீக் கொல்லுதல் கூடாது. ஏனெனில், மாதவ! ஸ்வஜனங்களைக் கொன்றுவிட்டு நாம் எப்படி ஸுகிகளாக இருப்போம்?

௪௮, ௪௯. லோபத்தால் கெட்ட மனத்தினரான இவர்கள், குலநாசத்தாலான தீங்கையும் மித்திரத்துரோகத்தில் (விளையும்) பாதகத்தையும் அறியாவிட்டாலும், குலநாசத்தாலான தீங்கை (நாம்) நன்றாய்ப் பார்க்கும் பொழுது, நமக்குஇப்பாபத்தைத் தவிர்க்கவப்படித்தெரியாமற்போகும்?

௫௦. குலம் கெட்டுப்போகும்பொழுது ஸநாதனமான குலதருமங்கள் (அதர்ஷ்டானத்தில்) இல்லாமற்போகின்றன. தருமங்கள் இல்லாமற்போக, குலம் முழுவதையும் அதர்மம் வியாபிக்கின்றது.

ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: ||
௫௧. ஸங்கரோ நரகாயைவ குலக்நாநாம் குலஸ்ய ச |
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோதகக்ரியா: ||
௫௨. தோஷைரேதை: குலக்நாநாம் வர்ணஸங்கரகாரகை:
உத்ஸாத்யந்தே ஜாதிதர்மா: குலதர்மாஶ்ச ஶாஶ்வதா: ||

---

௫௧. அதர்மம் வியாபித்தலால், கிருஷ்ண! குலஸ்திரீகள் கற்பழிந்து விடுகிறார்கள். ஸ்திரீகள் கற்பழிய, வார்ஷ்ணேய! ஜாதிக்கலப்பு உண்டாகின்றது.

௫௨. ஜாதிக்கலப்பானது குலத்தைக் கெடுத்தவரது குலத்திற்கும் நரகத்திற்கு ஏதுவாகின்றது; ஏனெனில், இவர்களுடைய பிதிருக்கள் பிண்டக்கிரியையும் உதகக்கிரியையும் இழந்திட்டவராய் (நரகத்தில்) வீழ்கிறார்கள்.

௫௩. ஜாதிக்கலப்பை விளைவிப்பனவாகிய குடிகேடர்களுடைய இத்தீத்தொழில்களால், சாச்வதமான ஜாதிதருமங்களும் குலதருமங்களும் கெட்டழிந்து போம்படி செய்யப்படுகின்றன.

சஉ. உத்ஸந்நகுலுயஉணாம் உநுஷ்யாணாம் ஜநாஉந |
நரகே நியதம் வாஸோ ஭வதீத்யநுசுசுரூஉ ||
சஉ. அஹோ ஬த ஹேஸ் வாவம் கதும் வ்யவஸிதா வயம் |
யத்ராஜ்யஸுகலோபேந ஹந்தும் ஸ்வஜநமுத்யதாஃ ||
சசு. யதி மாமப்ரதீகாரமசஸ்த்ரம் ஶஸ்த்ரபாணயஃ |
தார்தராஷ்ட்ரா ரணே ஹந்யுஃ தந்மே க்ஷேமதரம் ப⁴வேத் ||

சச. ஜநார்த்தந! குலதருமங்கெட்ட மனிதர்களுக்கு நரகத்திலே வாஸம் அவச்யம் உண்டெனக் கேட்டுள்ளோம்.

சஉ. ஆ! என்னே! மஹத்தான பாபஞ்செய்ய (அஞ்சாது) துணிந்திட்டோமே! ராஜ்யஸுகவிஷயமான கடும்பற்றினாலே ஸ்வஜனத்தைக் கொல்ல(வும்) முயன்றுளோ மாதலின்.

சசு. கையில் ஆயுதத்தையுடைய திருதராஷ்டிரபுத்திரர், போரில் (அவர்களை) எதிர்க்காமலும் (கையில்) ஆயுதமில்லாமலும் இருக்கின்ற என்னைக் கொல்வார்களானால், அது எனக்கு அதிக நலமாகும்.

ஸஂஜய உவாச—

சஎ. ஏவமுக்த்வார்ஜுநஃ ஸம்஖்யே ரதோபஸ்த உபாவிஶத் |
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம்விக்³நமாநஸஃ ||

இதி ஸ்ரீ ப�in ஶ்ரீமத்³ ப⁴க³வ³த்³கீ³தாஸு
உபநிஷத்ஸு ப்³ரஹ்மவித்³யாயாம் யோக³ஶாஸ்த்ரே
ஶ்ரீகி³ரிஶார்ஜுந ஸம்வாதே³ ப்ரத²மோঽத்⁴யாயஃ ||

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான்:

சஎ. அர்ஜுநன், இவ்வாறு சொல்லி, அம்போடு வில்லையும் போர்க்களத்திற் (கீழே) எறிந்து, சோகத்தாற் பதைத்த மனத்தினனாய்த் தேர்த்தட்டில் உட்கார்ந்துவிட்டான்.

முதல் அத்தியாயம் முற்றும்.

அத ஸ்வதீயொऽத்யாயः ஸாம்க்யயொகः ॥

ஸஂஜய உவாச—

க. தம் ததா கृபயாऽऽவிஷ்ட மஶ்ருபூர்ணாகுலேக்ஷணம் ।
விஷீதந்தமிதம் வாக்ய முவாச மது ஸூதனः ॥

ஶ்ரீபகவாந் உவாச—

உ. குதஸ்த்வா கஶ்மலமிதம் விஷமே ஸமுபஸ்திதம் ।

இரண்டாம் அத்தியாயம் : ஸாங்க்யயோகம்.

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

க. அவ்வாறு இரக்கம் மேலிட்டு, கண்களில் நீர் நிரம்பித் ததும்பப் பெற்று மனமேங்கிநிற்கின்ற அவனுக்கு மதுஸூதநர் இவ்வார்த்தையைக் கூறலானார் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

உ. அஸத்துக்கள் கைக்கொண்டதும், ஸ்வர்க்கத்தை அடையவொட்டாமல் தடுப்பதும், பழியை விளைவிப்பதுமான இம்மனநொய்ம்மையா

அநார்யஜுஷ்டமஸ்வர்க்யமகீர்திகரமர்ஜுந ॥
ங. க்லைப்யம் மாஸ்ம கமः பார்த நைதத்த்வய்யுபபத்யதே ।
க்ஷுத்ரம் ஹ்ருதயதௌர்பல்யம் த்யக்த்வோத்திஷ்ட பரந்தப ॥

அர்ஜுந உவாச—

ச. கதம் பீஷ்மமஹம் ஸங்க்யே த்ரோணம் ச மது ஸூதந ।
இஷுபிः ப்ரதியொத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூதந ॥

னது, (இந்த யுத்த) ஸங்கடத்திலே உனக்கு எங்கிருந்து வந்ததோ? அர்ஜுன!

ங. பார்த்த! பேடித்தன்மையைக் கொள்ளாதே; உனக்கு இது ஆகாது. பரந்தப! இந்த இழிவான மனநொய்ம்மையைத் தள்ளிவிட்டு எழுந்திரு.

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

ச. மதுஸூதந! (புஷ்பாதிகளால்) பூஜிக்கத்தக்கவர்களான பீஷ்மரையும் துரோணரையும் யான் எப்படிப் போரில் அம்புகளால் எதிர்த்துச்சண்டை செய்வேன்? அரிஸூதந!

இ. மாத்ரா ஸ்பர்சாஸ் து கௌந்தேய
ஶீதோஷ்ண ஸுக துக்ஹ தா:
ஆகமாபாயினோ அநித்யா:
தாம்ஸ்திதிக்ஷஸ்வ பாரத ||

உ. யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப
ஸமதுக்ஹ ஸுகம் தீரம் ஸோ அமிருதத்வாய கல்பதே ||

இ. மாட்சிமைதங்கிய மகான்களைக் கொல்லாமல் இவ்வுலகிலே பிச்சை யெடுத்துப் புசித்தலும் நல்லதாம். யான் பெரியோர்களைக் கொன்று விட்டாலோ, இரத்தந்தோயப் பெற்றவையான ஸம்பத்து காமம் போகம் இவைகளை இவ்வுலகிலேயே அனுபவிக்கவேண்டும்.

உ. மேலும், (பிச்சையெடுத்துப் பிழைத்தல் ஸ்வஜாதிதருமமென்று போர்புரிதல் என்ற இவ்விரண்டனுள்) எது நமக்கு மேலானதோ? (நாமே அவர்களை) வெல்வோமோ?—அல்லது (அவர்களே) நம்மை வெல்வாரோ? (என்ற) இதுவும் நமக்குத் தெரியாது. (நாம்) எவர்களைக்

யாநேவ ஹத்வா ந ஜிஜீவிஷாம:
தே஽வஸ்தி தா: ப்ரமுகே யாதவாநாம் ||

எ. கார்பண்ய தோஷோபஹதஸ்வபாவ:
ப்ருச்஛ாமி த்வாம் தர்மஸம்மூடசேதா: |
யச்ரேய: ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே
ஶிஷ்யஸ்தே஽ஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ||

கொன்றபின்னர் உயிர்வாழவிரும்பமாட்டோமோ, அந்தத் திருதராஷ்டிர புத்திரர்களே (இப்போர்க்களத்தில் நமக்கு) எதிரே வந்து நிற்கின்றார்கள்.

எ. கார்ப்பண்யமென்னும் (மனநொய்ம்மையாகிய) குற்றத்தினால் தன் தன்மை சிதைந்தவனாய், தருமவிஷயத்திலே மனம்திகைத்த அடியேன் (யாது நன்மை? எனத்) தங்களை வினவுகின்றேன்; எது உறுதியான நன்மையோ, அதனை எனக்கு உரைப்பீர்களாக; (ஏனெனின்,) நான் தங்களுடைய சிஷ்யனாகின்றேன்: தங்களை வந்தடைந்த எனக்கு, (நல்வழிப் படுமாறு) அறிவுறுத்தியருளுக.

அ. ந ஹி ப்ரபஶ்யாமி மமாபநுத்யாத்
யச்சோகமுச்சோஷணமிந்த்ரியாணாம் ।
அவாப்ய பூமாவஸபத்நமித்தம்
ராஜ்யம் ஸுராணாமபி சாதிபத்யம் ॥

ஸஞ்ஜய உவாச—

க. ஏவமுக்த்வா ஹ்ருஷீகேஶம் பு:஖ாகேஶ: பரந்தப: ।
ந யோத்ஸ்ய இதி கோவிந்த உக்த்வா தூஷ்ணீம் பபூவ ஹ ॥

அ. உலகிலே பகைவரற்றதாய்ச் செழித்திருக்கும் ராஜ்யமும், தேவர்களுக்குத்தலைவனாயிருத்தலும் கிடைக்கப்பெற்றாலும், இந்திரியங்களை (த் தீப்போல) அழற்றுகின்றதான என் துயரத்தைப் போக்குவது இன்னதென்றெனக்குத் தெரியவே இல்லை [இந்திரபதவியைப் பெற்றாலும், என் துயரம் தீருமாறு இல்லை].

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

க. பகைவரை எரிக்கும் குடாகேசன், இவ்வாறு ஹ்ருஷீகேசனிடம் சொன்னபின்பு, "போர் புரியமாட்டேன்" என்று(ம்) கோவிந்தனிடம் சொல்லிவிட்டு (மேலொன்றும்) பேசாமலே இருந்திட்டான்.

கo. தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸந்நிவ பாரத ।
ஸேநயோருபயோர்மத்யே விஷீதந்தமிதம் வச: ॥

ஶ்ரீ பகவாந் உவாச—

கக. அஶோச்யாந்வஶோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே ।
கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா: ॥
கஉ. ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா: ।
ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் ॥

கo. பாரத! இருசேனைக்கும் இடையே (இவ்வாறு) மனங்கலங்கி நிற்கும் அவனுக்கு, ஹ்ருஷீகேசன், புன்னகை செய்கிறவர்போன்று இவ்வார்த்தையைக் கூறலாயினர் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

கக. நீ, (யாவராலும்) துக்கிக்கவேண்டாதவரைப்பற்றித் துக்கப்படுகிறாய் ; ஞானவார்த்தைகளையும் பேசுகிறாய். உயிர்போனவரையும், உயிர் வாழ்பவரையும் பற்றி ஞானிகள் துக்கியார்.

கஉ. நானும், நீயும், இந்த அரசர்களும் ஒருபொழுதும் இல்லாதிருந்ததில்லை. இனிமேலும் நாமெல்லோரும் இல்லாமற்போவது மில்லை.

கங. தெஹிநொऽஸ்மிந்யதா தெஹே களாரம் யௌவநம் ஜரா।
ததா தெஹாந்தரப்ராப்திர்தீரஸ்தத்ர ந முஹ்யதி ॥
கச. மாத்ராஸ்பர்சாஸ்து கௌந்தேய சீதோஷ்ணஸுகதுஃக-
தாயிநொऽநித்யாஸ்தாம்ஸ்திதிக்ஷஸ்வ பாரத ॥ [ஃ।
கடு. யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷபா।
ஸமதுஃகஸுகம் தீரம் சோऽமृதத்வாய கல்பதே ॥

கங. தேகிக்கு, இந்தத்தேகத்திலே பால்யமும், யௌவனமும், மூப்பும் எப்படியோ, அப்படித்தான் வேறுதேகத்தை அடைவது(ம்); அவ்விஷயத்தில் ஞானி மயங்கமாட்டான். [தேகி - தேகமுடையது : ஆத்மா]

கச. கௌந்தேய! இந்திரியஸ்பர்சங்கள் குளிர்வெப்பத்தையும், இன்பதுன்பங்களையும் கொடுத்துத் தோன்றிமறையுந்தன்மையனவாய் அநித்தியமா யிருக்கின்றன; பாரத! அவற்றை நீ பொறுக்கக்கடவாய்

கடு. மனிதரிற் சிறந்தோனே! ஸுகதுக்கங்களை ஸமமாகக்கொண்ட எந்தத் தீரபுருஷனை, இவை உண்மையாகவே துன்பப்படுத்தமாட்டாவோ, அவன் சாகாநிலைக்கு உரியவனாகிறான்.

கசு. நாஸதோ விद्यதே பாவோ நாபாவோ விद्यதே ஸதः।
உபயோரபி த்ருஷ்டோऽந்தஸ்த்வநயோஸ்தத்த்வதர்சிபிः ॥ [தः।
கஎ. அவிநாசி து தத்வித்தி யேந ஸர்வமிதம் ததம்।
விநாசமவ்யயஸ்யாஸ்ய ந கश्चित் கர்துமர்ஹதி ॥
கஅ. அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தாः சரீரிணः।
அநாசிநோऽப்ரமेயஸ்ய தஸ்மாத்யுத்ய்ஸ்வ பாரத ॥

கசு. மெய்ம்மையைக் காணும் இயல்பினராலே 'பொய்ப்பொருளுக்கு உண்மை இல்லை, மெய்ப்பொருளுக்கு இன்மை இல்லை' (என) இவ்விரண்டற்கும் முடிவு கண்டுவைக்கப்பட்டுளது.

கஎ. இதெல்லாம் எதனால் வியாபிக்கப்பட்டுளதோ, அதனையே அழிவில்லாததாகத் தெரிந்துகொள். (தன்) நிலை திரியாத இதற்கு ஒருவராலும் அழிவுசெய்ய இயலாது.

கஅ. நித்தியமாய், கேடில்லதாய், அறிதற்கு அரியதான தேகியின் இச்சரீரங்கள், முடிவுள்ளவையாகக் கூறப்பட்டிருக்கின்றன; ஆதலின், போர்செய்யக்கடவாய், பாரத!

கக. யஏனம் வேத்தி ஹந்தாரம் யஶ்சைனம் மந்யதே ஹதம் ।
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே ॥
உ0. ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்
நாயம் பூத்வாऽபவிதா வா ந பூய: ।
அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே ॥

கக. எவன் இதனைக் கொல்வதாக அறிகிறானோ, எவன் இதனைக் கொல்லப்படுவதாக அறிகிறானோ ; அவ்விருவரும் சரியாக அறிபவரா கார். (ஏனெனில்,) இது கொல்வது(ம்) இல்லை, கொல்லப்படுவது(ம்) இல்லை.

உ0. இது பிறப்பதில்லை : ஒருகாலத்து இறப்பதும் இல்லை : (ஒரு காலத்து) இருந்து மறுபடி இல்லாமற்போவதும் இல்லை : (ஒருகாலத்து இல்லாதிருந்து) மறுபடி இருப்பதும் இல்லை. பிறவாததாய், நித்திய மாய், சாச்வதமாய், புராணமாயுள்ள இது, சரீரம் கொலையுண்ணும் பொழுது, (தான்) கொல்லப்படுவதில்லை.

உக. வேதாவிநாஶிநம் நித்ய: ய ஏநமஜமவ்யயம் ।
கதம் ஸ பு:ருஷ: பார்த: கம் காதயதி ஹந்தி கம் ॥
உஉ. வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய
நவாநி க்ருஹ்ணாதி நரோऽபராணி ।
ததா ஶரீராணி விஹாய ஜீர்ணா-
ந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ ॥
உங. நைநம் ஛ிந்தந்தி ஶஸ்த்ராணி நைநம் தஹதி பாவக: ।
ந சைநம் க்லேதயந்த்யாப: ந ஶோஷயதி மாரு:தம் ॥

உக. எவன் இதனை அழிவற்றதாய், நித்யமானதாய், பிறவாததாய் குறைபாடில்லாததாக அறிகின்றானோ, அப்புருஷன், பார்த்த ! எப்படி யாரைக் கொல்லும்படி செய்கிறான் ? யாரைக் கொல்கிறான் ?

உஉ. எப்படி ஒரு மனிதன் பழைய ஆடைகளைக் கழித்து வேறு புதிய ஆடைகளை எடுத்துக்கொள்கின்றானோ, அப்படியே, தேகியானது பழையஉடல்களைக் கழித்து வேறு புதியஉடல்களை அடைகின்றது.

உங. இதனை ஆயுதங்கள் வெட்டா : இதனை நெருப்பு எரிக்கா : இதனை நீரும் நனைக்கா : இதனைக் காற்று(ம்) உலர்த்தா.

உச. அவ்யக்தோऽயமசிந்த்யோऽயமவிகார்யோऽயமுச்யதே ।
தஸ்மாதேவம் விதித்வைநம் நாநுசோசிதுமர்ஹஸி ॥

உஙி. அவ்யக்தாதீநி பூதாநி வ்யக்தமத்ய தநாநி ச ।
அவ்யக்தநிதநாந்யேவ தத்ர கா பரிதேவநா ॥

உகூ. ஆஶ்சர்யவத்பஶ்யதி கஶ்சிதேநம்
ஆஶ்சர்யவத்வததி தथைவ சாந்ய: ।

உச. இது வெட்டமுடியாதது : இது எரிக்கமுடியாதது : நனைக்க முடியாதது : உலர்த்தவும் முடியாதது. இது நித்தியமானது : எங்கும் உள்ளது : நிலையானது : அசைவற்றது : எப்பொழுதும் உள்ளது.

உஙி. இது புலப்படாதது : இது நினைக்கமுடியாதது : இது விகாரப் படாதது (என்று வேதங்களால்) கூறப்படுகின்றது. ஆதலால், நீ இதனை இவ்வாறு தெரிந்துகொண்டு, வருந்தவேண்டாம்.

உகூ. ஒருகால் நீ இதனை என்றும் பிறப்பதும், என்றும் இறப்பதுமாக எண்ணினாலும், உயர்தோள! நீ இவ்வாறு துக்கிக்கவேண்டாம்.

உஎ. ஜாதஸ்ய ஹி ध्रुவோ ம்ருத்யுர்ध्रुவம் ஜந்ம ம்ருதஸ்ய ச ।
தஸ்மாதபரிஹார்யேऽர்தே ந த்வம் சோசிதுமர்ஹஸி ॥

உஅ. அவ்யக்தாதீநி பூதாநி வ்யக்தமத்ய தநாநி ச ।
அவ்யக்தநிதநாந்யேவ தத்ர கா பரிதேவநா ॥

உகூ. ஆஶ்சர்யவத்பஶ்யதி கஶ்சிதேநம்
ஆஶ்சர்யவத்வததி தथைவ சாந்ய: ।

உஎ. பிறந்ததற்கோ இறப்பு நிச்சயம் ; இறந்ததற்குப் பிறப்பும் நிச்சயம். ஆதலின், தவிர்க்கமுடியாத விஷயத்திலே நீ துயரப்படுதல் தக்கதன்று.

உஅ. பூதங்கள் அவ்யக்தத்தை [காணப்படாமையை] ஆதியாகவும், காணப்படுதலை நடுவாகவும், காணப்படாமையை முடிவாகவுமே உடையன. பாரத! அவ்விஷயத்திலே புலம்புகை என்ன?

உகூ. ஒருவன் இதனை ஆச்சரியமானதுபோலப் பார்க்கிறான் : அப்படியே வேறொருவன் (இதனை) ஆச்சரியமானதுபோலப் பேசுகிறான் :

ஆஶ்சர்யவத்பஶ்யதி கஶ்சிதேனம்
ஆஶ்சர்யவத்வததி ததைவ சான்ய: ||

ஸர்வஸ்ய தேஹீ நித்யமவத்யோऽயம் தேஹே ஸர்வஸ்ய பாரத |
தஸ்மாத்ஸர்வாணி பூதாநி ந த்வம் ஶோசிதுமர்ஹஸி ||

ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய ந விகம்பிதுமர்ஹஸி |
தர்ம்யாத்தி யுத்தாச்ரேயோऽந்யத் க்ஷத்ரியஸ்ய ந வித்யதே ||

பின்னும் மற்றொருவன் இதனை ஆச்சரியமானதுபோலக் கேட்கிறான் : கேட்டும், ஒருத்தனும் இதனை அறிவதே இல்லை.

ஸ0. எல்லாருடைய சரீரத்திலுமுள்ள இந்தத் தேகியானது, ஒரு பொழுதும் கொல்லமுடியாதது ; ஆதலால், பாரத ! நீ எந்தப் பூதங்களைப்பற்றியும் வருந்துதல் தகாது.

ஸக. ஸ்வ [உன்] தருமத்தை நோக்கும்பொழுதும், நீ பின்னிடவேண்டாம் ; ஏனெனில், நியாயமான யுத்தத்தினும் நன்மையானது க்ஷத்திரியனுக்கு வேறு இல்லையன்றோ.

யத்ருச்சயா சோபபந்நம் ஸ்வர்கத்வாரமபாவ்ருதம் |
ஸுகிந: க்ஷத்ரியா: பார்த லபந்தே யுத்தமீத்ருஶம் ||

அத சேத்ஸ்வதர்மம் யுத்தம் ந கரிஷ்யஸி |
ததஃ ஸ்வதர்மம் கீர்திம் ச ஹித்வா பாபமவாப்ஸ்யஸி ||

அகீர்திம் சாபி பூதாநி கதயிஷ்யந்தி தேऽவ்யயாம் |
ஸம்பாவிதஸ்ய சாகீர்திர்மரணாததிரிச்யதே ||

ஸஉ. தற்செயலாய் நேர்ந்திருக்கின்றதும், திறந்துள்ள ஸ்வர்க்கவாசலுமான இத்தகைய யுத்தத்தை, பார்த்த ! பாக்கியவான்களான க்ஷத்திரியர்கள் பெறுகிறார்கள்.

ஸஙு. இனி, இந்த நியாயமான யுத்தத்தை நீ செய்யாவிடில், அதனால் ஸ்வதருமத்தையும் புகழையும் இழந்து, பாவத்தை யடைவாய்.

ஸச. ஜனங்கள் உன்னுடைய அபகீர்த்தியையும் என்றைக்கும் சொல்லுவார்கள் : மதிப்பைப் பெற்றவனுக்கோ அபகீர்த்தியானது மரணத்தினும் அதிகமாம்.

௩௫. ஭யாத்ரணாதுபரதம் மம்யந்தே த்வாம் மஹாரதாஃ ।
யேஷாம் ச த்வம் பஹுமதோ ভூத்வா யாஸ்யஸி லாகவம் ॥
௩௬. அவாச்யவாதாம்ஶ்ச பஹூந் வதிஷ்யந்தி தவாஹிதாஃ ।
நிந்தந்தஸ்தவ ஸாமர்த்யம் ததோ துஃகதரம் நு கிம் ॥
௩௭. ஹதோ வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்கம் ஜித்வா வா ভோக்ஷ்யஸே
தஸ்மாதுத்திஷ்ட கௌந்தேய யுத்தாய க்ருதநிশ্চயஃ ॥ [மஹீம் ।

---

௩௫. மகாரதர்கள், உன்னை, பயத்தால் யுத்தத்தினின்று பின்வாங்கினவனாக நினைப்பார்கள். நீ எவர்களால் மிக்குமதிக்கப்பட்டிருக்கிறாயோ, (அவரது வெகுமதிப்பை முதலில் பெற்றவ)னாகி (ப் பின்னர் அவரது) அவமதிப்பைப் பெறுவாய்.

௩௬. உன் பகைவர்கள் உனது வல்லமையை இகழ்பவராய், சொல்லத்தகாத பலசொற்களையும் சொல்லுவார்கள். அதனினும் அதிக துக்கமானது ஏது ?

௩௭. நீ கொலையுண்டாலோ, ஸ்வர்க்கத்தை அடைவாய் ; ஜயித்தாலோ, பூமியை அநுபவிப்பாய். ஆதலால், கௌந்தேய! போர்புரிய உறுதிகொண்டு எழுந்திரு.

௩௮. ஸு஖துஃகே ஸமே க்ருத்வா லாபாலாபௌ ஜயாஜயௌ ।
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாபமவாப்ஸ்யஸி ॥
௩௯. ஏஷா தேঽভிஹிதா ஸாங்க்யே
বুদ্ধির்யோகே த்விமாம் ஶৃணு ।
বুদ্ধ্যா யுக்தோ யயா பார্থ கர্ம்பந்தம் প্রஹாஸ்யஸி ॥
௪০. நேஹாভিக্রமநாশোঽস্তি প্রত্যவாயோ ন விদ্যதে ।
স্বল্পমপ্যস্য ধর্মস্য ত্রায়তে মহতো ভয়াத் ॥

---

௩௮. இன்பதுன்பங்களையும் லாபநஷ்டங்களையும் வெற்றிதோல்விகளையும் ஸமமாகப் பாவித்து, பின்பு போரைக்கூடுவாயாக. நீ இவ்வாறு பாவத்தை அடையமாட்டாய்.

௩௯. இந்தப் புத்தியானது ஸாங்க்யவிஷயத்திலே உனக்குச் சொல்லப்பட்டது. ஆனால், பார்த்த! நீ எந்தப் புத்தியைக்கூடி, கர்மமாகிய கட்டை அவிழ்த்துக்கொள்வாயோ, (அந்த) இதனை [யோகபுத்தியை] யோகவிஷயத்திலே கேள் :

௪০. இதில் முயற்சி பாழாகாது : குற்றம் வராது. இந்தத் தருமத்தின் சொற்பமும்கூட (ஒருவனைப்) பெரிய பயத்தினின்றும் காக்கின்றது.

சக. வ்யவஸாயாத்மிகா ஬ுத்தி: ஏகேஹ குரு நந்தந !
஬ஹுஶாகா ஹ்யனந்தாஶ்ச ஬ுத்தயோऽவ்யவஸாயினாம் ॥
சஉ. யாமிமாம் வாசம் ப்ரவதந்த்யவிபஶ்சித: ।
வேதவாதரதா: பார்த ந்யாந்யதீதி வாதிந: ॥
சங. காமாத்மாந: ஸ்வர்கபரா: ஜந்மகர்மபலப்ரதாம் ।
க்ரியாவிஶேஷபஹுலாம் போகைஶ்வர்யகதிம் ப்ரதி ॥
சச. போகைஶ்வர்யப்ரஸக்தாநாம் தயாऽபஹ்ருதசேதஸாம் ।

சக. குருநந்தந ! இங்கு நிச்சயத்தன்மையையுடைய புத்தி ஒன்றுதான். உறுதியற்றவர்களுக்கு, புத்திகளோ அளவில்லாதனவாய்ப் பல கிளைகளை உடையன.

சஉ, சங, சச. அறிவீனர்கள், பார்த்த ! வேதவார்த்தைகளில் பிரிய முடையவராய் வேறு(ஒன்றும்)இல்லைஎன்று கூறுபவராய், காமத்தன்மையராய்ச் சுவர்க்கத்தையே மேலாகக்கொண்டவராய், ஜன்மத்தையே கர்மத்தின்பயனாகக் கொடுப்பதும், போகத்தையும் செல்வத்தையும் அடையும்விஷயத்தில் சிறப்புக்கர்மங்கள்மிகுந்துள்ளதுமான யாதொரு

வ்யவஸாயாத்மிகா ஬ுத்தி: ஸமாதௌ ந விதீயதே ॥
சரு. த்ரைகுண்யவிஷயா வேதா: நிஸ்த்ரைகுண்யோ ভவார்ஜுந
நிர்த்வந்த்வோ நித்யஸத்த்வஸ்த: நிர்யோகக்ஷேம ஆத்மவாந் ॥ [ஜ்ஞ
சஙு. யாவாநர்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே ।

இந்த மலர்ந்த வார்த்தையைக் கூறுகிறார்களோ ; அ(ந்)த(வார்த்தையி)னால் மனம்கவரப்பட்டவராய்ப் போகத்திலும் செல்வத்திலும் அழுந்தினவர்களுடைய மனத்தில் உறுதித்தன்மைத்தான புத்தி உண்டாவதில்லை.

சரு. வேதங்கள் முக்குணங்களையும் (தாம் கூறும்) விஷயங்களாக உடையன. அர்ஜுன ! நீ முக்குணங்களற்றவனாகவும், த்வந்தங்களற்றவனாகவும், எப்பொழுதும் ஸத்துவத்திலேயே நிற்பவனாகவும், யோகக்ஷேமமில்லாதவனாகவும், ஜாக்கிரதையுடையவனாகவும் இருக்கவேண்டும்.

சஙு. (கிணறு முதலிய)நீர்நிலையில் எவ்வளவு உபயோகம் உள்ளதோ, அவ்வளவு (உபயோகமும்) எங்கும்பெருகிய நீர்ப்பெருக்கில் உள்ளது.

தாவாநு ஸவெ⸗ஷு வெதெஷு ஸ்ராஹ்மணஸ்ய விஜாநத: ||
சஎ. கர்மணியேவாதிகாரஸ்தே மா ஫லேஷு கதாசந |
மா கர்ம஫லஹேதுர்பூர்மா தெ ஸங்கோऽஸ்த்வகர்மணி ||
சஅ. யோகஸ்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தநஞ்ஜய |
ஸித்த்யஸித்த்யோ: ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதெ ||

(அதுபோல,) ஸகலவேதங்களிலும் (எவ்வளவு ப்ரயோஜனம் உள்ளதோ, அவ்வளவு ப்ரயோஜனமும்) ஞானியான ப்ராஹ்மணனுக்கு (ப்ரஹ்மாநந்தத்தில் உள்ளது).

சஎ. கர்மத்திலேதான் உனக்கு அதிகாரம். ஒருகாலும் பயன்களிலே அதிகாரம் வேண்டாம். (நீ) கர்மத்தின் பயனை வருவித்துக் கொள்பவனாக ஆகாதே. கர்மத்தைச் செய்யாமையிலே உனக்குப் பிரியம் இல்லாதிருக்கட்டும்.

சஅ. தநஞ்ஜய ! யோகத்திலேநிலைத்துப் பற்றைவிட்டு (பயன்)கைகூடுவதிலும் கைகூடாமையிலும் ஸமமாக இருந்து கர்மங்களைச் செய்; ஸமமாயிருத்தலே யோகம் எனப்படுகின்றது.

சக. ஏதாவாந் ஹ்யுபாயோ கர்ம ஸ்வர்கீயோ மாஸ்ய தநஞ்ஜய |
ஸ்வர்கீய ஸ்ரீணாமுந்த்ய கூபவாரீ ஹ்ருஹெதவ: ||
ரு0. ஸ்வர்கியுக்தோ ஜஹாதீஹ உபெ ஸுக்ருதது:ஷ்ருதெ |
தஸ்மாத்யோகாய யுஜ்யஸ்வ யோக: கர்மஸு கௌஶலம் ||
ருக. கர்மஜம் ஬ுத்தியுக்தா ஹி ஫லம் த்யக்த்வா மநீஷிண: |
ஜந்மபந்த்ய விநிர்முக்தா: பதம் க்ச்ச்ந்த்யநாமயம் ||

சக. தநஞ்ஜய ! (காம்ய) கர்மமானது,புத்தியோகத்தைக்காட்டிலும் மிகத்தாழ்ந்ததன்றோ. (அந்தப்) புத்தியிலே (உனக்கு) அடைக்கலத்தைத் தேடிக்கொள். பயனைக் கருதுவோர் கீழோராவர்.

ரு0. (ஸமத்வ)புத்தியைக் கூடினவன் இங்கே நல்வினை தீவினையிரண்டனையும் நீக்கிக்கொள்கிறான் ; ஆதலால் (நீ) யோகத்தைக் கூடுவாயாக ; யோகமானது கர்மங்களில் ஸாமர்த்திய மாம்.

ருக. (ஸமத்வ)புத்தியுடையவர்கள்,கர்மத்தினாலுண்டாகும் பயனை விட்டிட்டு, ஞானிகளாய்ப் பிறப்பென்னும் கட்டினின்று முற்றும்விடுபட்டுத் தொந்தரவுஅற்ற இடத்திற்குச் செல்கிறார்கள்.

௫௨. யதா தே மோஹகலிலம் புத்திர்வ்யதிதரிஷ்யதி ।
ததா கந்தாஸி நிர்வேதம் ஶ்ரோதவ்யஸ்ய ஶ்ருதஸ்ய ச ॥
௫௩. ஶ்ருதிவிப்ரதிபன்னா தே யதா ஸ்தாஸ்யதி நிஶ்சலா ।
ஸமாதாவசலா பुத்திः ததா யோகமவாப்ஸ்யஸி ॥

அர்ஜுந உவாச—

௫௪. ஸ்திதப்ரஜ்ஞஸ்ய கா பாஷா ஸமாதிஸ்தஸ்ய கேஶவ ।
ஸ்திதधீः किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ।

---

௫௨. எப்பொழுது உன் மனமானது மயக்கக்கலக்கத்தைக் கடந்திடுமோ, அப்பொழுது (நீ) கேட்கவேண்டியதிலும் கேட்டதிலும் வெறுப்பை யடைவாய்.

௫௩. (பல) கேள்விகளால் பலவாறாய்க் கலங்கியுள்ள உன்மனமானது எப்பொழுது ஆத்மாவிடத்து நிச்சலமாய் அசைவற்றதாய் நிற்குமோ, அப்பொழுது (நீ) யோகத்தைப் பெறுவாய்.

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௫௪. கேசவ ! ஞானம்நிலைத்து ஸமாதியில் நிற்பவனை எவ்வாறு சொல்வது ? ஞானம்நிலைத்தவன் எவ்வாறு பேசுவான் ? எவ்வாறு இருப்பான் ? எவ்வாறு நடப்பான் ?

ஶ்ரீபகவாந் உவாச—

௫௫. प्रजहाति यदा कामान् सर्वान् पार्थ मनोगतान् ।
आत्मन्येवात्मना तुष्टः स्थितप्रज्ञस्तदोच्यते ॥
௫௬. दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः ।
वीतरागभयक्रोधः स्थितधीर्मुनिरुच्यते ॥
௫௭. यः सर्वत्रानभिस्नेहः तत्तत्प्राप्य शुभाशुभम् ।

ஶ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௫௫. பார்த்த ! (ஒருவன்) தானாக ஆத்மாவிடத்தே ஸந்தோஷித்திருப்பவனாய், மனத்திலுள்ள ஸகல ஆசைகளையும் எப்பொழுது தள்ளிவிடுகின்றானோ, அப்பொழுது ஞானம்நிலைத்தவன் எனப்படுகிறான்.

௫௬. துக்கங்களில் நொந்திடாத மனத்தினனாய், ஸுகங்களில் ஆசையற்றவனாய், (பொருள்களின்மேல்) பற்றும் பயமும் கோபமும் நீங்கப்பெற்றவனாய் இருப்பவன், நிலைத்தஞானமுடையவன் முனிவன் எனப்படுகிறான்.

௫௭. எவன் எங்கும் பற்றில்லாதவனாய், நல்லதும் தீயதுமான

நாஸி தம்ஷ்டி ந வெஷ்டி தஸ்ய ஜ்ஞாநீ ஸுதிஷ்஠தி ॥

௫௮. யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோঽங்காநீவ ஸர்வஶः ।
இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ் தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்஠ிதா ॥

௫௯. விஷயா விநிவர்தந்தே நிராஹாரஸ்ய தேஹிநः ।
ரஸவர்ஜம் ரஸோঽப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே ॥

அதனைப்பெற்று மகிழ்வுறுமோ வெறுப்புறுமோ, அவனது ஞானம் நிலைபெற்றது.

௫௮. ஆமை (தன்) அவயவங்களை எல்லாப்பக்கங்களினின்றும் (உள்ளே) அடக்கிக்கொள்ளுமாறுபோல, இவன் எப்பொழுது விஷயங்களினின்றும் இந்திரியங்களை அடக்கிக்கொள்ளுகிறானோ, (அப்பொழுது) அவனுடைய ஞானம் நிலைத்தது.

௫௯. உணவில்லாத மனிதனுக்கு ரஸத்தைத் தவிர விஷயங்கள் ஒழிகின்றன. பரம்பொருளைக் கண்டபின்பு, இவனுடைய ரஸமும் [அவாவும்] ஒழிகின்றது.

௬௦. யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஶ்சிதः ।
இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மநः ॥

௬௧. தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பரः ।
வஶே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்஠ிதா ॥

௬௨. ஧்யாயதோ விஷயாந்பும்ஸः ஸங்கஸ்தேஷூபஜாயதே ।

---

௬௦. ஏனெனில், புத்திசாலியான புருஷன் (தன் இந்திரியங்களை அடக்க) முயல்கின்றனனாயினும், கௌந்தேய! கொந்தளிக்கும் இயல்புடைய இந்திரியங்கள் மனத்தை வலியக்கவர்ந்துகொண்டு போகின்றன.

௬௧. (அவன்) அவற்றையெல்லாம் அடக்கி, என்னிடத்தே ஈடுபட்டவனாய் அமைந்து இருக்கவேண்டும். இந்திரியங்கள் எவனுக்கு(த் தன்) வசத்தில் இருக்கின்றனவோ, அவனுக்கு ஞானம் நிலைத்தது.

௬௨. விஷயங்களை நினைக்கும் புருஷனுக்கு அவற்றின்மேல் பற்று

ஸங்காத் ஸஞ்ஜாயதே காமஃ காமாத்க்ரோதோঽபிஜாயதே ||

சுங. க்ரோதாத்பவதி ஸம்மோஹஃ ஸம்மோஹாத் ஸ்மிருதிவிப்ரமஃ |
ஸ்மிருதிப்ரம்ஶாத்புத்திநாஶோ புத்திநாஶாத் ப்ரணஶ்யதி || [உஃ |

சுச. ராகத்வேஷவியுக்தைஸ்து விஷயானிந்த்ரியைஶ்சரன் |
ஆத்மவஶ்யைர்விதேயாத்மா ப்ரஸாதமதிகச்ச்ஹதி ||

உண்டாகிறது : பற்றினின்றும் ஆசை உண்டாகிறது : ஆசையினின்றும் கோபம் உண்டாகின்றது.

சுங. கோபத்தினின்று மயக்கமும், மயக்கத்தினின்று நினைவுத்தவறும், நினைவுத்தவறினின்று அறிவுகேடும்உண்டாகின்றது. அறிவுகெடுதலால் (ஒருவன்) முற்றும் கெட்டுப்போகிறான் :

சுச. அகக்கரணம்அடங்கியவனோ,விருப்புவெறுப்புக்கள் நீங்கப்பெற்றுத் தனக்குஅடங்கிநிற்கும் இந்திரியங்களால் விஷயங்களிற் சென்று, (மனத்) தெளிவைப் பெறுகிறான்.

சுரு. ப்ரஸாதே ஸர்வதுஃகாநாம் ஹாநிரஸ்யோபஜாயதே |
ப்ரஸன்னசேதஸோ ஹ்யாஶு புத்திஃ பர்யவதிஷ்ঠதே || [தெ

சுசு. நாஸ்தி புத்திரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பாவநா |
ந சாபாவயதஃ ஶாந்திஃ குதஃ ஸுகமஸ்ய கு தஃ || .

சுஎ. இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோঽநுவிதீயதே |

சுரு. தெளிவுள்ளவழி, இவனுடைய துன்பங்கட்கெல்லாம் கழிவு பிறக்கின்றது , ஏனெனில், மன்தெளிந்தவனுக்குப் புத்தி விரைவாக நிலைத்துநிற்கின்றது.

சுசு. ஒருநிலையில்லாதவனுக்கு ஞானம் உண்டாவதில்லை : ஒருநிலையில்லாதவனுக்கு (ஆத்ம) த்யாநமும் உண்டாவதில்லை : (ஆத்ம)த்யாநமில்லாதவனுக்கு ஒழிபும் உண்டாவதில்லை : ஒழிபற்றவனுக்கு ஸுகம் ஏது ?

சுஎ. ஏனெனில், எந்த மனமானது (விஷயங்களில்) திரிகின்ற இந்திரியங்களைப் பின்தொடர்கின்றதோ, அது, ஜலத்திலே கப்பலைக் காற்று

தஷஸு ஹரதி ஹி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்஭ஸி ॥

௬௮. தஸ்மாத்யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதானி ஸர்வஶஃ।
இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஃ தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்஠ிதா ॥

௬௯. யா நிஶா ஸர்வபூதானாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ।
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா நிஶா பஶ்யதோ முனேஃ॥

(அடித்துக்கொண்டுபோவது)போல, இவனுடைய அறிவைக் கவர்ந்துகொண்டுபோகின்றது.

௬௮. ஆதலால், உயர்தோள ! எவனுடைய இந்திரியங்கள் இந்திரிய விஷயங்களினின்று எவ்வாற்றாலும் அடக்கப்பட்டனவோ, அவனுடைய ஞானம் நிலைத்தது.

௬௯. எது பிராணிகட்கெல்லாம் இரவோ, அதில், அடக்கமுள்ளவன் விழித்திருக்கிறான். எதில் பிராணிகள் விழித்திருக்கின்றனவோ, அது, (உண்மையைக்) காணும் முனிவனுக்கு இரவு.

எ௦. ஆபூர்யமாணமசலப்ரதிஷ்ட
ஸமுத்ரமாபஃ ப்ரவிஶந்தி யத்வத்।
தத்வத்காமா யம் ப்ரவிஶந்தி ஸர்வே
ஸ ஶாந்திமாப்நோதி ந காமகாமீ ॥

எக. விஹாய காமான் யஃ ஸர்வான் புமாம்ஶ்சரதி நிஸ்ப்ருஹஃ।
நிர்மமோ நிரஹங்காரஃ ஸ ஶாந்திமதிகச்ச்ஹதி ॥

எ௦. எப்புறமும் (ஆற்றுநீரால்) பெருக்கப்படுகிறதாய் (த் தன்) நிலை மாறாதுநிற்கும் ஸமுத்திரத்தை ஜலங்கள் எவ்வாறு புகுகின்றனவோ, அவ்வாறே ஆசைகளெல்லாம் எவனைப் புகுகின்றனவோ, அவன் சாந்தியை அடைகிறான் ; காமத்தை விரும்புகிறவன் (அதனை அடைவது) இல்லை.

எக. எந்தப் புருஷன் ஸகல காமங்களையும் விட்டு, பற்றற்றவனாய், அஹங்காரமமகாரங்கள் இல்லாதவனாய்த் திரிகின்றானோ, அவன் சாந்தியைப் பெறுகிறான்.

எஉ. வாஷா ஸ்ராஷீ ஷ்ரிதிஃ வாயுஃ
நெநாம் ஷ்ராவ்ய விஊஹ்யதி ।
ஷ்ரிக்வாzஷ்ராஷ்ஹகாஹ்ரெzவி
ஸ்ரஷ்ஹநிவ்ராணஸ்ரஷ்ஹதி ॥

இதி ஸ்ரீ தீயொzத்யாயஃ ॥

எஉ. பார்த்த ! இது ப்ரஹ்மத்தைப்பற்றிய நிலை. இதனை அடைந்து (ஒருவனும்) மயங்கமாட்டான். (ஒருவன்) கடைசிக்காலத்திலும் [முதுமைப்பருவத்திலும்] இதிலே நின்று ப்ரஹ்மாநந்தத்தை அடைகிறான்.

இரண்டாம் அத்தியாயம் முற்றும்.

சுஜுஊந உவாச—

க. ஜ்யாயஸீ செத்கர்மணஸ்தே மதா புத்திர்ஜனார்தன ।
தத்கிம் கர்மணி கொரெ மாம் நியொஜயஸி கெஶவ ॥
உ. வ்யாமிஶ்ரேணெவ வாக்யேந புத்திம் மொஹயஸீவ மெ ।

மூன்றும் அத்தியாயம் : கர்மயோகம்.

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

க. ஜநார்த்தன ! ஞானம் கர்மத்திலும் மேலானதென்பது உமது கருத்தாயின், அப்பொழுது என் கேசவ ! கொடிய தொழிலிலே என்னை ஏவுகிறீர்?

உ. மலைக்கச்செய்வதுபோன்ற வார்த்தையினால் என்னுடைய புத்தியை மயக்குகின்றீர்போலும். நான் எதனால் நன்மையைப்பெறுவே

தத்ரைகம் வத நிஶ்சித்ய யேன ஶ்ரேயோऽஹமாப்நுயாம் ।
ஶ்ரீபகவாநுவாச—

ந. லோகேऽஸ்மிந் த்விவிதா நிஷ்டா புரா ப்ரோக்தா மயாऽநக।
ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம் ॥

ச. ந கர்மணாமநாரம்பாந் நைஷ்கர்ம்யம் புருஷோऽஶ்நுதே ।
ந ச ஸந்ந்யஸநாதேவ ஸித்திம் ஸமதிகச்ச்ஹதி ॥

னோ, அந்த ஒன்றை [ஞானகர்மங்களுள், உனக்கு உரியது இன்னதுதான் என்பதை]ப் பிரித்துச் சொல்லவேண்டும்.

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார் :

ந. பாபமற்றவனே ! முன்பு இவ்வுலகத்திலே ஸாங்க்யர்களுக்கு ஞானயோகத்தாலும், யோகிகளுக்குக் கர்மயோகத்தாலும் இருவகையான நிஷ்டைகளை யான் உபதேசித்தேன்.

ச. ஒருவன் கர்மங்களைச் செய்யாமையினால் நைஷ்கர்ம்யத்தை [கர்மமற்றநிலையைப்] பெறுகிறானில்லை ; (அவற்றைத்) துறத்தலினாலேயே ஸித்தியை அடைகிறானுமில்லை.

ரு. ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்ட்யகர்மக்ருத் ।
கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்கு:ணை: ॥

சு. கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மநஸா ஸ்மரந் ।
இந்த்ரியார்தாந் விமூடாத்மா மிथ்யாசார: ஸ உச்யதே ॥

எ. யஸ்த்விந்த்ரியாணி மநஸா நியம்யாரபதேऽர்ஜுந ।
கர்மேந்த்ரியைர் கர்மயோகமஸக்த: ஸ விஶிஷ்யதே ॥

ரு. ஏனெனில், ப்ரகிருதியினின்றுந் தோன்றும் குணங்களால் ஒவ்வொன்றும் ஸ்வாதீநமற்றுக் கர்மத்திற் செலுத்தப்படுகின்ற தாதலால், ஒன்றாவது எக்காலத்தும் ஒருகணப்பொழுதாயினும் தொழிலைச் செய்யாததாக இருப்பதில்லை.

சு. எவன் கர்மேந்திரியங்களை அடக்கி, இந்திரியவிஷயங்களை மனத்தில் நினைத்துக்கொண்டு மனம்மயங்கி இருக்கின்றானோ, அவன், 'ஆசாரக்கள்ளன்' எனப்படுகிறான்.

எ. அர்ஜுந ! மற்று எவன் இந்திரியங்களை மனத்தால் அடக்கிக் கொண்டு, கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தைப், பற்றற்றவனாய் அநுஷ்டிக்கிறானோ, அவன் மேலாகின்றான்.

அ. நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: ||
ஶரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்யேத்கர்மண: ||
கூ. யஜ்ஞார்த்தாத்கர்மணோऽந்யத்ர லோகோऽயம் கர்மபந்த: |
ததர்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க: ஸமாசர || [தி: |
கo. ஸஹ யஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாப-

அ. நீ (உனக்கு) அமைந்த கர்மத்தைக் செய்யக்கடவாய்; ஏனெனின், செய்தல் செய்யாமையினும் மேலானது: மற்றும், (அதனைச்) செய்யாதிருப்பதனால், சரீரத்தைக் கொண்டுசெலுத்தலும் உனக்கு முடியாது.

கூ. யஜ்ஞத்திற்கான கர்மத்தைத்தவிர (மற்றைய கர்மத்தினால்தான்) இவ்வுலகம் கர்மக்கட்டையுடைத்து: கௌந்தேய! அதற்கான கர்மத்தைப், பற்றுவிட்டவனாய் நன்கு செய்யக்கடவாய்.

கo. ப்ரஜாபதியானவர் முதலில் யஜ்ஞங்களோடுகூடவே ப்ரஜைகளைப் படைத்து, "(நீங்கள்) இதனால் [யஜ்ஞத்தால்] அபிவிருத்திசெய்

ஸுநேந ப்ரஸவிஷ்யத்வமேஷ வோऽஸ்த்விஷ்டகாமதுக் ||
கக. தேவாந் பாவயதாऽநேந தே தேவா பாவயந்து வ: |
பரஸ்பரம் பாவயந்த: ஶ்ரேய: பரமவாப்ஸ்யத || [வி தா: |
கஉ. இஷ்டான் போகாந் ஹி வோ தேவா தாஸ்யந்தே யஜ்ஞபா-
விதா: தைர்தத்தாநப்ரதாயைபோ யோ பும்க்தே ஸ்தேந ஏவ ஸ: ||

யுங்கள்; இது, உங்களுக்கு வேண்டியவிருப்பங்களைக் கொடுப்பதாக (இருக்கட்டும்" என்று) கூறினர்.

கக. "(நீங்கள்) இதனால் தேவர்களை விருத்தியடையச் செய்யுங்கள்: அந்த தேவர்கள் உங்களை விருத்தியடையச்செய்யட்டும்; (இவ்வாறு) ஒருவரையொருவர் விருத்திசெய்கிறவர்களாய் மேலான நன்மையை அடையுங்கள்."

கஉ. "தேவர்கள் யாகங்களால் விருத்தியடைவிக்கப் பெற்றவர்களாய் உங்களுக்கு வேண்டிய போகங்களைக் கொடுப்பார்களன்றோ." அவர்கள் கொடுத்தவற்றை இவர்கட்குக் கொடாமல் எவன் அநுபவிக்கின்றானோ, அவன் திருடனே யாவான்.

கரு. யஜ்ஞசிஷ்டாசினஃ ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பிஷைஃ ।
஭ுஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்யாத்மகாரணாத் ॥
கச. அந்நாத்பவந்தி பூதாநி பர்ஜந்யாத்அந்நஸம்பவஃ ।
யஜ்ஞாத்பவதி பர்ஜந்யோ யஜ்ஞஃ கர்மஸமுத்பவஃ ॥
கரு. கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம் ।
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்஠ிதம் ॥

கரு. யாகசேஷத்தைப் புசிக்கும் ஸாதுக்கள் ஸகல பாவங்களாலும் விடப்படுகிறார்கள். மற்று, தமக்காக எவர்கள் சமைக்கிறார்களோ, அந்தப் பாவிகள் பாவத்தை உண்கிறார்கள்.

கச, கரு. (உட்கொள்ளும்)உணவினின்றுபிராணி(களின்சரீரங்)கள் உண்டாகின்றன: உணவு மழையினின்று உண்டாகின்றது: மழையாகத்தினின்று உண்டாகின்றது: யாகம் கர்மத்தினின்று உண்டாகின்றது. கர்மத்தை ப்ரஹ்மத்தினின்று உண்டானதாக(வும்), ப்ரஹ்மத்தை அழிவில்லாப்பொருளினின்று உண்டானதாக(வும்) தெரிந்துகொள். ஆதலால், ஸகலத்தையும்பற்றிய ப்ரஹ்மமானது யாகத்திலே நிலைபெற்றதாம்.

கரு. ஏவம் ப்ரவர்திதம் சக்ரம் நாநுவர்தயதீஹ யஃ ।
அகாயுரிந்த்ரியாராமோ மோகம் பார்த ஸ ஜீவதி ॥
கள. யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாத் ஆத்மதृப்தஶ்ச மாநவஃ ।
ஆத்மந்யேவ ச ஸந்துஷ்டஃ தஸ்ய கார்யம் ந விद्यதே ॥
கஅ. நைவ தஸ்ய க்ருதேநார்தோ நாக்ருதேநேஹ கஶ்சந ।

கரு. பார்த்த! இங்கு எவன் பாவஆயுஸையும் இந்திரியவிளையாட்டையும் உடையவனாய் இவ்வாறு செலுத்தப்பட்டுள்ள சக்கிரத்தை அநுசரிப்பதில்லையோ, அவன் வீணாக உயிர்வாழ்கின்றான்.

கள. மற்று, எந்த மனிதன் ஆத்மாவினிடத்தே மகிழ்ச்சியுடையவனாய், ஆத்மாவிலேயே திருப்திபெற்றவனாய், ஆத்மாவினிடத்திலேயே ஸந்தோஷமுள்ளவனாய் இருக்கின்றானோ, அவனுக்கு (உலகவ்யவகாரமும் வேதவ்யவகாரமுமான) கார்யம் இல்லை.

கஅ. இங்கே (ஒன்று) செய்யப்பெற்றதனாலும், செய்யப்பெறாததனாலும் அவனுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லையேஇல்லை. இன்னும்,

ந ஹாஸ்ய ஸர்வபூதேஷு கஶ்சிதர்த்தவ்யாபாஶ்ரயः ॥
கக. தஸ்மாதஸக்தः ஸததம் கார்யம் கர்ம ஸமாசர ।
ஸஸக்தோ ஹ்யாசரன்கர்ம பரமாப்நோதி பூருஷः ॥
உ0. கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதயः ।
லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந் கர்துமர்ஹஸி ॥

இவனுக்கு ஸகல பூதங்களினிடத்தும் ஒருபயனுக்காக ஆச்ரயிக்கவேண்டியது ஒன்றும் இல்லை.

கக. அதனால், நீ செய்யவேண்டிய கர்மத்தைப் பற்றில்லாதவனாய் எப்பொழுதும் செய்யக்கடவாய் ; ஏனெனில், பற்றற்றவனாய்க் கர்மஞ் செய்கிற புருஷன் மேலானதைப் பெறுகிறான்.

உ0. ஏனெனில், ஜநகர்முதலானோர்கள் கர்மத்தினாலேயே ஸித்தி பெற்றார்கள். நீ உலகத்தை நல்வழியில் நடக்கச்செய்தலை நன்கு ஆலோசித்தும், (கர்மத்தைச்) செய்யத்தகுந்தவனே ஆகிறாய்.

உக. யத்யதாசரதி ஶ்ரேஷ்ठः தத்ததேவேதரோ ஜநः ।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்ததே ॥
உஉ. ந மே பார்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந ।
நாநவாப்தமவாப்தவ்யம் வர்த ஏவ ச கர்மணி ॥
உங. யதி ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரितः ।
மம வர்த்மாநுவர்தந்தே மநுஷ்யாः பார்த ஸர்வஶः ॥

உக. மேலானவன் எதெதைச் செய்கின்றானோ, அதனையே மற்றை ஜனங்கள் (செய்கிறார்கள்) : அவன் எதனை ப்ரமாணமாகக் கொள்கின்றானோ, அதனை உலகம் அநுசரிக்கின்றது.

உஉ. பார்த்த ! மூன்று உலகங்களிலும் எனக்குச் செய்யவேண்டியதொன்றும் இல்லை. (இனி நான்) அடையவேண்டியதாய் (இப்பொழுது) அடையாதிருப்பது (ஒன்றும்) இல்லை. ஆயினும், கர்மத்தில் இருக்கவே இருக்கின்றேன்.

உங. ஏனெனில், நான் சோம்புதலில்லாதவனாய் எப்பொழுதாயினும் கர்மத்தில் இராவிட்டால், பார்த்த ! மனிதர்கள் எவ்வகையிலும் என்வழியை அநுஸரிப்பார்கள்.

உச. உத்ஸீதெயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் ।
ஸங்கரஸ்ய ச கர்தா ஸ்யாம் உபஹந்யாமிமா: ப்ரஜா: ॥
உரு. ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத ।
குர்யாத்விதாம்ஸ்ததாஸக்த: சிகீர்ஷுர்லோகஸங்க்ரஹம் ॥
உகூ. ந புத்திபேதம் ஜநயேத் அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம் ।

உ ச. யான் கர்மத்தைச் செய்யாவிடில், இந்த உலகங்கள் அழிந்து போகும் : ஜாதிக்கலப்பிற்குக் காரணமு மாவேன் : இந்த ப்ராணிகளைக் கெடுத்தவன் ஆவேன்.

உ டு. பாரத ! எப்படி அஜ்ஞானிகள் கர்மத்தில் பற்றுடையவராய்(க் கர்மத்தைச்) செய்கிறார்களோ, அப்படியே ஞானி பற்றில்லாதவனாய் உலகத்தை நல்வழிப்படுத்த விரும்பி (கர்மத்தை)ச் செய்யவேண்டும்.

உ கூ. ஞானியானவன் கர்மத்திற் பற்றுள்ள அஜ்ஞானிகளுக்குப் புத்திக்கலக்கத்தை உண்டாக்கக்கூடாது. ஊக்கமுடையவனாய் ஸகலகர்

ஜோஷயேத்ஸர்வகர்மாணி விதாந்யுக்த: ஸமாசரந் ॥
உஎ. ப்ரகிருதேர்க்ரியமாணாநி குணைர்கர்மாணி ஸர்வச:।
அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே ॥
உஅ. தத்த்வவித்து மஹாபாஹோ குணகர்மவிபாகயோ: ।
குணா குணேஷு வர்தந்தே இதி மத்வா ந ஸஜ்ஜதே ॥

மங்களையும் (தாமும்) நன்றாகச் செய்துகொண்டு, (அவர்களையும்) செய்விக்கவேண்டும்.

உ எ. அகங்காரத்தால் மனம்மயங்கியிருப்பவன், எவ்வகையிலும் ப்ரகிருதியின் குணங்களால் செய்யப்படுகின்ற கர்மங்களை "நான் செய்கின்றேன்" எனக் கொள்கிறான்.

உ அ. உயர்தோள ! குணங்களும் (அவற்றின்) தொழில்களுமாகிய (இ)வற்றின் பிரிவுகளினுடைய உண்மையையுணர்ந்தவனோ, 'இந்திரியங்கள் விஷயங்களின்வழியே செல்லுகின்றன' எனக் கொண்டு (கர்மங்களிற்)பற்றுக் கொள்வதில்லை.

உகூ. ப்ரகிருதெர்கு3ணஸம்மூடா: ஸஜ்ஜந்தே கு3ணகர்மஸு ।
தானகிருத்ஸ்nவிதோ மந்தான் கிருத்ஸ்nவிந்ந விசாலயேத் ॥

உ0. மயி ஸர்வாணி கர்மாணி ஸம்ந்யஸ்யாத்4யாத்மசேதஸா ।
நிராஶீர்நிர்மமோ பூத்வா யுத்4ய்வ விக3தஜ்வர: ॥

உக. யே மே மதமிதம் நித்ய மநுதிஷ்ந்தி மாநவா: ।
ஶ்ரத்4ாவந்தோऽநஸூயந்த: முச்யந்தே தேऽபி கர்மபி: ॥

உகூ. (எவர்கள்) ப்ரகிருதியின் குணங்களால் முற்றும் மயங்கியவராய், குணங்களுடைய கர்மங்களிலே பற்றுக்கொள்கிறார்களோ, அந்த முற்றும் உணராத அஜ்ஞானிகளை முற்றும்உணர்ந்தவன் கலங்கும்படி செய்யக்கூடாது.

உ0. ஆத்மாவைப்பற்றிய மனத்தோடு ஸகலகர்மங்களையும் என்னிடத்துவைத்து, ஆசையற்றவனாய் மமகாரமில்லாதவனாய்த் துயரம்நீங்கிப் போர்செய்யக்கடவாய்.

உக. எந்த மனிதர்கள் என்னுடைய இக்கொள்கையை இடக்குப்பேசாமல் நம்பிக்கையொடு எப்பொழுதும் அநுஷ்டிக்கிறார்களோ, அவர்களும் கர்மங்களால் விடப்படுகிறார்கள்.

உஉ. யே த்வேதத்4ப்4யஸூயந்த: நாநுதிஷ்ந்தி மே மதம் ।
ஸர்வஜ்ஞாநவிமூடாம்ஸ்தாந் வித்4தி நஷ்டாநசேதஸ: ॥

உஙு. ஸத்3ருஶம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரகிருதேர்ஜ்ஞாநவாநபி ।
ப்ரகிருதிம் யாந்தி பூதாநி நிக்3ரஹ: கிம் கரிஷ்யதி ॥

உச. இந்த்3ரியஸ்யேந்த்3ரியஸ்யார்தே2 ராகத்3வேஷௌ வ்யவஸ்தி[illegible]

உஉ. ஆனால், இடக்குப்பேசுகின்ற எவர்கள் என்னுடைய இக்கொள்கையை அநுஷ்டிப்பதில்லையோ, அவர்களை, அவிவேகிகளாகவும் (ஸகுண நிர்க்குணங்களைப்பற்றிய) அறிவிலெல்லாம் பலவாறாக மயங்கியவர்களாகவும் அழிந்துபோனவர்களாகவும் தெரிந்துகொள்.

உங. ஞானமுள்ளவனும்கூடத் தன்னுடைய ஸ்வபாவத்திற்குஏற்ப நடக்கின்றனன் : பிராணிகள்(எல்லாம் தம்தம்) ஸ்வபாவத்தை அநுஸரிக்கின்றன. தடுப்பது என்ன செய்யும்?

உச. விருப்புவெறுப்புக்கள் ஒவ்வொரு இந்திரியத்தினுடைய விஷயத்திலேயும் அமைந்துள்ளன ; (ஒருவனும்) அவற்றின் [விருப்புவெறு

தயொ தபு வஶஶுஶ்ரூஷ் தள ஹுவஸு வாரிவம்யிநள ॥
௩௫. ஶ்ரேயாநு ஸ்வயஶொ விஶுணஃ வாரயஶுாக் ஸ்வநுஷ்஠ி-
ஸ்வயஶொ நியநம் ஶ்ரேயஃ வாரயஶொ ஹயாவஹஃ ॥ [தாக்

அஜுாந உவாச—

௩௬. அத கெந ப்ரயுக்தொ2யம் பாபம் சரதி பூருஷஃ ।
அநிச்ச்ஹந்நபிவார்ஷ்ணேய பலாதிவ நியொஜிதஃ ॥

ப்புக்களின்]வசத்தை அடையக்கூடாது ; ஏனெனில்,அவை இவனுக்கு விரோதிகள்.

௩௫. நன்கு அநுஷ்டிக்கப்பட்டதான பிறருடைய தருமத்தைக் காட்டிலும் குணமில்லாத [நன்கு அநுஷ்டிக்கப்படாத] தன்தருமம் மேலானது ; தன்தருமத்திலே சாதல் நல்லது ; பிறருடைய தருமம் பயத்தை விளைப்பது.

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௩௬. வார்ஷ்ணேய ! இனி, இப்புருஷன் (ஒன்றனைச்செய்ய) விரும்புகின்றிலனாயினும், வலிய ஏவப்பட்டவன்போல், எதனால் தூண்டப்பட்டுப் பாவத்தைச் செய்கிறான் ?

ஶ்ரீபகவாநு உவாச—

௩௭. காம ஏஷ க்ரோத ஏஷஃ ரஜோகுணஸமுத்ப4வஃ ।
மஹாஶநோ மஹாபாப்மா வித்4ந்யேநமிஹ வைரிணம் ॥
௩௮. தூமேநாவ்ரியதே வஹ்நிர்யதாऽऽத3ர்ஶோ மலேந ச ।
யதோல்பேநாவ்ரியதே கர்ப4ஸ்ததா தேநேதமாவ்ருதம் ॥
௩௯. ஆவ்ருதம் ஜ்ஞாநமேதேந ஜ்ஞாநிநோ நித்யவைரிணா ।

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௩௭. இது காமம் : இது(வே) கோபம் : (இதுவே) ரஜோகுணத்தினின்று உண்டாவது : பெருந்தீனியுடையது : மிகப்பொல்லாதது : நீ இங்கே இதனைச் சத்துருவாகத் தெரிந்துகொள்.

௩௮. நெருப்புப் புகையாலும், கண்ணாடி அழுக்காலும் எவ்வாறு மூடப்பட்டிருக்கின்றனவோ, கருவானது பையினால் எவ்வாறு மூடப்பட்டிருக்கின்றதோ, அவ்வாறு அதனால் இது மூடப்பட்டிருக்கின்றது.

௩௯. கௌந்தேய ! ஞானிக்கு எப்பொழுதும் சத்துருவும், (விஷ

காமரூபேண கௌந்தேய துஷ்பூரேணாநலேந ச ||
௪௦. இந்த்ரியாணி மநோ புத்திரஸ்யாதிஷ்டாநமுச்யதே |
ஏதைர்விமோஹயத்யேஷ: ஜ்ஞாநமாவ்ருத்ய தேஹிநம் ||
௪௧. தஸ்மாத்த்வமிந்த்ரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷபம் |
பாப்மாநம் ப்ரஜஹிஹ்யேநம் ஜ்ஞாநவிஜ்ஞாநநாசநம் ||
௪௨. இந்த்ரியாணி பராண்யாஹுரிந்த்ரியேப்ய: பரம் மந:

பதுகர்ச்சியால்) நிரம்பாததும், (அதிலே) திருப்திவாராததுமான காமமாகிய இதனால் அறிவு மூடுண்டுகிடக்கின்றது.

௪௦. இந்திரியங்களும், மனமும், புத்தியும் இதனுடைய இருப்பிடம் எனப்படுகின்றன. இது இவற்றின்வழியாக அறிவை மறைத்துத், தேகியைப் பலவகையாக மயக்குகின்றது.

௪௧. அதனால், ஏ ! பரதரிற் சிறந்தோனே ! நீ முதலில் இந்திரியங்களை அடக்கிக்கொண்டு, சாஸ்திரஅறிவையும் அநுபவஅறிவையும் அழிக்கின்ற பொல்லாத இதனைக் கொன்றுவிடு.

௪௨. (ஞானிகள்) இந்திரியங்களை மேலாகக் கூறுகின்றனர் : இந்

இந்த்ரியேப்ய: பரா ஹ்யர்தா அர்தேப்ய: பரம் மந: ||
௪௩. மநஸஸ்து பரா புத்திர்யோ புத்தேரபி பரதஸ்து ஸ: ||
ஏவம் புத்தேரபரம் புத்த்வா ஸம்ஸ்தப்ய்யாத்மாநமாத்மநா |
ஜஹி ஶத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம் ||

இதி ஸ்ரீ பகவதீ யோ உபநிஷத்ஸு ||

திரியங்களைக்காட்டிலும் மனம் மேலானது : மனத்தைக்காட்டிலும் புத்தியோ மேலானது : புத்தியைக்காட்டிலும் மேலானது எதுவோ, அது (ஆத்மா).

௪௩. உயர்தோள ! நீ இவ்வாறு புத்திக்கு மேலானதை அறிந்து, மனத்தை மனத்தால் நிறுத்தி, வெல்லுதற்கு அரிதான காமமாகிய சத்துருவைக் கொல்லு.

மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

சுய வதஸ்யெஶுாzயூாயஃ ஜ்ோநயொமஃ ॥

ஶ்ரீஹமவாநு உவாச—

க. இமம் விவஸ்வதெ யொமடி பொக்தவாநஹமவ்யயம் ।
விவஸ்வாந்மநவெ ப்ராஹ உநுரிக்ஷ்வாகுவெzப்ரவீச் ॥
உ. ஏவம் பராம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயொ விதுஃ ।
ஸ காலெநெஹ மஹதா யொமொ நஷ்டஃ பரந்தப ॥

நான்காம் அத்தியாயம் : ஞானயோகம்.

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

க. இந்த அழிவிலா யோகத்தை யான் விவஸ்வானுக்கு உபதேசித்தேன் : விவஸ்வான் மநு(ப்ரஜாபதி)க்கு உபதேசித்தனன் : மநு இக்ஷ்வாகுவுக்கு உபதேசித்தனன்.

உ. இவ்வாறு பரம்பரையாகவந்த இதனை ராஜர்ஷிகள் அறிந்திருந்தார்கள். வெகுகாலமானமையால் பரந்தப ! அந்த யோகம் இப்பொழுது சிதைந்து போயிற்று.

ங. ஸ ஏவாயம் மயா தெzத்ய யொமஃ ப்ரொக்தஃ புராதநஃ ।
஭க்தோzஸி மெ ஸகா செதி ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம் ॥

அர்ஜுந உவாச—

ச. அபரம் ப�஢வதொ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வதஃ ।
கதமெதத்விஜாநீயாம் த்வமாதௌ ப்ரொக்தவாநிதி ॥

ங. இந்தப் பழமையான அதேயோகமானது, நீ என்னுடைய பக்தனாகவும் தோழனாகவும் இருக்கிறாய் என உனக்கு என்னால் இன்று கூறப்பட்டது ; ஏனெனில், இது உயர்ந்த ரஹஸ்யமாம்.

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

ச. உங்களுடைய பிறப்புப் பிந்தினது ; ஸூர்யனுடைய பிறப்பு முந்தினது. (இப்படியிருக்க) நீங்கள் முதலில் (அந்த யோகத்தை அவனுக்கு) அருளிச்செய்தீர்கள் என்ற இதனை, நான் எவ்வாறு அறியலாகும் ?

ஸ்ரீபகவாநுவாச—

௫. பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந ।
தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத பரந்தப ॥
௬. அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோऽபி ஸந்।
ப்ரகृதிம் ஸ்வாமதிஷ்ட்ாய ஸம்பவாம்யாத்மமாயயா ॥
௭. யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத ।
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாऽऽத்மாநம் ஸृஜாம்யஹம் ॥

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார் :

௫. அர்ஜுந ! உனக்கும் எனக்கும் பல பிறவிகள் சென்றுபோயின. அவற்றையெல்லாம் யான் அறிவேன் ; நீ அறியமாட்டாய் பரந்தப !

௬ பிறவாதவனானாலும், குறைவிலாத்தன்மையனானாலும், பூதங்களுக்கு ஈச்வரனானாலும், (யான்) என் மாயையை வசப்படுத்திக்கொண்டு, என்மாயையினால் பிறக்கின்றேன் [அவதரிக்கின்றனேன்].

௭. பாரத ! (உலகத்திலே) தருமத்திற்குக் குறைவும், அதர்மத்திற்கு ஏற்றமும் வரும்போதெல்லாம் யான் என்னைப் படைத்துக்கொள்கிறேன்.

அ. பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥

௧. ஜந்ம கர்ம ச மே திவ்யமேவம் யோ வேத்தி தத்த்வத: ।
த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந ॥
௧௦. வீதராகபயக்ரோधா: மந்மயா மாமுபாஶ்ரிதா: ।

அ. நல்லோரைப் பாதுகாத்தற்கும், தீயனசெய்வோரை முற்ற ஒழித்தற்கும், தருமத்தை நன்கு நாட்டுதற்கும் (யான்) யுகந்தோறும் அவதரிக்கின்றேன்.

௧. திவ்யமான என்னுடைய அவதாரத்தையும் செய்கையையும் எவன் இவ்வாறு உண்மையாய் அறிகிறானோ, அவன் (தனது) உடலை விட்டபின்பு மறுபிறப்பைப் பெறுவதில்லை ; அர்ஜுந ! அவன் என்னை அடைகிறான்.

௧௦. (பொருள்களிலே) ஆசை பயம் கோபம் இவை நீங்கியவர்களாய், என் மயமானவர்களாய், என்னைப் புகலடைந்தவராய், ஞான

பஹவோ ஜ்ஞாநதபஸா பூதா மத்பாவமாகதாः ॥
கக. யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் ।
மம வர்த்மாநுவர்தந்தே மநுஷ்யாः பார்த ஸர்வஶः ॥
கஉ. காங்க்ஷந்தः கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதாः ।
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா ॥

மாகிய தபஸினால் பரிசுத்தரான அனேகர்கள் என் தன்மையை அடையலானார்கள்.

கக. எவர்கள் என்னை எவ்வாறு அடைகிறார்களோ, அவர்களை நான் அவ்வாறே அனுக்ரகிக்கின்றேன். பார்த்த! மனிதர்கள் எவ்வாற்றாலும் என்வழியை அநுஸரிக்கிறார்கள்.

கஉ. (தாம் செய்யும்) கர்மங்களின் ஸித்தியை [பயன் கைகூடுதலை] விரும்புகிறவர்கள் இங்கே தேவதைகளை ஆராதிக்கிறார்கள்; ஏனெனில், கர்மத்தினாலுண்டாகும் ஸித்தியானது மநுஷ்யலோகத்திலே விரைவாக ஆகின்றது.

கங. சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் கு:ணகர்மவிபாகஶः।
தஸ்ய கர்தாரமபி மாம் வித்ந்யகர்தாரமவ்யயம் ॥
கச. ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா ।
இதி மாம் யோऽபிஜாநாதி கர்மபிர்ந ஸ பத்யதே ॥ [ஸிः ।
கரு. ஏவம் ஜ்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வைரபி முமுக்ஷுபி:-

கங. நான்கு ஜாதியும், குணம் கர்மம் என்றவற்றின் பலவகையான அளவிற்குத்தக்கபடி என்னால் படைக்கப்பட்டன. (யான்) அதனைச் செய்தவனாயினும், (அதனைச்) செய்யாதவனாக நிர்விகாரியாக இருக்கிறேன் என்று என்னை நீ அறியக்கடவாய்.

கச. "கர்மங்கள் என்னைப் பற்றா: கர்மத்தின் பயனிலே எனக்கு அவா இல்லை" என எவன் என்னைத் தெரிந்துகொள்கின்றானோ, அவன் கர்மங்களால் கட்டப்படான்.

கரு. இவ்வாறாக அறிந்து, (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபடவிரும்பிய முன்னோர்களாலும் கர்மமானது செய்யப்பட்டது. ஆதலால்,

கூஷ கரெஒவ தஷாத்ஷு வகுவெஃ வகுவுதரம் கூதகு।
கசு. கிம் கரு கிஃகரெஒதி கவயொzவுத ஶொஹிதாஃ।
தத்தெ(z)கரு ஷுவக்ஷ்யாமி யஜ்ஜாக்வா ஶொக்ஷுஹெzஶுபாஶ॥
கஎ. கரு ணொஹுவி வொஊவுழி வொஊவும் ச விகரு ணஃ।
சுகரு ணஶ்ச வொஊவுழி மஹாநா கரு ணொ மதிஃ॥

முந்தின பண்டைக்காலத்தில் முன்னோர்களால் செய்யப்பட்ட கர்மத்தையே நீ செய்யக்கடவாய்.

கசு. கர்மமென்பது என்ன? அகர்மமென்பது என்ன? என்ற இதிலே, அறிவுடையோரும் மயங்கிவிட்டார்கள். நீ எதனை அறிந்து, தீமையினின்றும் விடுவிக்கப் படுவாயோ, அந்தக் கர்மத்தையும் அகர்மத்தையும் யான் உனக்கு உபதேசிப்பேன்.

கஎ. ஏனெனில், கர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு: விகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு: அகர்மத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு. கர்மத்தின் போக்கானது அறிதற்கு அரியது.

கஅ. கரு ணுகரு யஃ வஶ்யெ சுகரு ணி ச கரு யஃ।
ஸ வுஃலிஷாநு உநுஷ்யெஷு ஸ யுக்தஃ க்ருத்ஸ்நகரு க்ருத் ॥
கசு. யஸ்ய ஸவெ ஸமாரம்பாஃ காமஸம்கல்வவர்ஜிதாஃ।
ஜ்ஞாநாக்நிதக்தகரு மாணம் தமாஹுஃ பண்டிதம் புதாஃ॥
உ0. த்யக்த்வா கரு மஃலாஸம்கம் நித்யதிரெ நிராஶ்ரயஃ।

கஅ. எவன் கர்மத்திலே அகர்மத்தைக் காணக்கூடுமோ, எவன் அகர்மத்திலும் கர்மத்தைக் காணக்கூடுமோ, அவன், மனிதர்களுள் அறிவுள்ளவன்; (அவன் ஞானநிஷ்டையைக்) கூடினவன், கர்மங்களெல்லாவற்றையும் செய்தவன்.

கசு. எவனுடைய கர்மங்களெல்லாம், ஆசையும் அபிமானமும் அற்றனவோ; ஞானமாகிய தீயினால் (ஸகல) கர்மமும் எரிக்கப்பட்டனவோ; அவனை ஞானிகள் "பண்டிதன்" என்கிறார்கள்.

உ0. கர்மத்தின் பயனிலே பற்றை விட்டு, எப்பொழுதும் திருப்தியுடையவனாய் ஆச்ரயமின்றி நிற்கின்றவன் கர்மத்தை மேற்கொண்

கரோதி யத் ॥
உக. நிராசீர்யத்தசித்தாத்மா த்யக்தஸர்வபரிக்ரஹः ।
சாரீரம் கேவலம் கர்ம குர்வன்நாப்நோதி கில்பிஷம் ॥
உஉ. யதிச்சாலாபஸந்துஷ்டः த்வந்த்வாதீதோ விமத்ஸரः ।
ஸமः ஸித்தாவஸித்தௌ ச கृத்வாபி ந நிபத்யதே ॥

டிருந்தாலும், அவன் ஒன்றுஞ் செய்கின்றானே இல்லை. [ஆச்ரயம்- ஒரு பொருளினுடைய அபேக்ஷை.]

உக. ஆசை நீங்கி, மனத்தையும் தன்னையும் [இந்திரியங்களோடு சரீரத்தையும்] அடக்கி, (தனது பணம், நிலம், முதலிய) ஸகல உடைமைகளையும் விட்டிட்டு, சாரீரகர்மத்தைமாத்திரம் செய்பவன் பாவத்தை யடையமாட்டான். [சாரீரகர்மம் - சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம்வேண்டிய கர்மம்.]

உஉ. தானாகக் கிடைப்பதைக்கொண்டு திருப்தியடைந்தவன், த்வந்தவங்களைக் கடந்தவன் : பொறாமையில்லாதவன் : (உணவுமுதலியன) கிடைத்தலிலும் கிடையாமையிலும் ஒப்பநிற்பவன். (அவன் ஒன்றனைச்)செய்தாலும், (அதனால்) கட்டப்படான்.

உங. முக்தஸங்கஸ்ய ஜ்ஞாநாவஸ்தித சேதஸः ।
யஜ்ஞாயாऽऽசரதः கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே ॥
உச. ப்ரஹ்மார்பணம் ப்ரஹ்ம ஹவிः ப்ரஹ்மாக்னௌ ப்ரஹ்மணா
ஹுதம் ।
ப்ரஹ்மைவ தேந கந்தவ்யம் ப்ரஹ்மகர்மஸமாதிநா ॥ [ஹுதம்॥
உடு. தைவமேவாபரே யஜ்ஞம் யோகிநः பர்யுபாஸதே ।
ப்ரஹ்மாக்னாவபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோபஜுஹ்வதி ॥

உங. பற்றில்லாதவனும், விடுபட்டவனும், ஞானத்திலே மனம் நிலைத்தவனும் பகவானுக்காகச் செய்கிறவனுடைய கர்மமெல்லாம் கரைந்துபோகின்றன.

உச. அர்ப்பிப்பது ப்ரஹ்மம் : ஹவிஸ் ப்ரஹ்மம் : அக்னியாகிய ப்ரஹ்மத்திலே (யஜமானனாகிய) ப்ரஹ்மத்தால் ஹோமஞ்செய்யப்படுதல் ப்ரஹ்மம் : ப்ரஹ்மமாகிய கர்மத்திலே ஸமாதியுள்ள அவனால் அடையப்படுவது(ம்) ப்ரஹ்மமே.

உடு. சில (கர்ம)யோகிகள் தேவதைகளுக்கே யஜ்ஞத்தைச் செய்கிறார்கள் : வேறொருவர், ப்ரஹ்மமாகிய அக்நியிலே ஆத்மாவை ஆத்மாவினாலேயே ஹோமஞ்செய்கிறார்கள்.

